2004 ஜூலை 29]

78—

டைடல் பூங்கா

***23761—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் டைடல் பூங்கா–II அமைக்கும் பணியை அரசு விரைந்து முடிக்குமா?

(ஆ) ஆம் எனில், இதுபோன்ற டைடல் பூங்கா கோயம்புத்தூரில் எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமும் மற்றும் சிங்கப்பூர் நிறுவனமான அசென்டாஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் நிறுவனமும் சேர்ந்து சென்னையில் தரமணியில் டைடல் பூங்கா, அதாவது புதிய தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதற்குக் கொள்கை அளவில் 4–7–2002 அன்று கையெழுத்திட்டு, டிட்கோவும் அசென்டாஸும் சேர்ந்து 17–6–2003 அன்று இணைத் துறை ஒப்பந்தம் ஒன்று செய்து கொண்டது. ஒவ்வொரு கட்டமும் 18 மாதங்கள் என்ற அடிப்படையில் 54 மாதங்களில் நிறைவேற்றிடத் திட்டமிட்டுள்ளது. முதல்கட்ட தொடக்கப் பணிகள் 140 கோடி ரூபாய் செலவில், கிட்டத்தட்ட 7,000 பேர்களுக்கு மேலாக வேலைவாய்ப்புப் பெறுகின்ற வகையில், வருகின்ற ஏப்ரல் 2005-க்குள்ளாகக் கட்டி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) சென்னையில் அமைந்துள்ளதைப்போல கோயம்புத்தூரில் தகவல் தொழில்நுட்பத்தை மேம்படுத்த டைடல் பார்க் அமைப்பது குறித்து தகவல் தொழில்நுட்பத் துறையில் பரிசீலிக்கப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலிலே சென்னையிலே டைடல் பூங்கா–II அமைக்கும் பணி துரிதமாக நடைபெறுவதாகக் கூறினார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கும் நன்றியைக்

கூறிக்கொள்ள விரும்புகிறேன். டைடல் பூங்கா அமைக்கக் கூடிய பணியைப் பொறுத்தவரை சென்னை நகரம், கோவை நகரம் ஆகிய இரண்டு நகரங்கள் மட்டும்தான் டைடல் பூங்கா அமைப்பதற்கு உகந்த இடம் என்று Wipro, Infosys, Tata Consultancy போன்ற பன்னாட்டு நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. தமிழகத்தை ஒரு முன்னோடி மாநிலமாக உருவாக்குவதற்கு, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் முனைப்போடு செயல்பட்டுவரும் இந்த வேளையில், கோவை நகரம், தொழில்நுட்பவியல் முதலீட்டிற்கு உகந்த இடமாக இருப்பதால், சென்னை நகரத்தைப்போல, கோவை நகரத்திலும், டைடல் பூங்கா அமைப்பதற்குத் துரித நடவடிக்கையை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கோவையைச் சுற்றிலும் போதிய இட வசதி உள்ளது; தொழிலாளர்கள் உள்ளார்கள்; பொறியியல் கல்லூரி அங்கே உள்ளது; இரயில் வசதி, பன்னாட்டு விமானப் போக்குவரத்து வசதி, டெலிபோன் வசதி போன்ற பல்வேறு வசதிகள் அங்கே இருக்கக்கூடிய வகையிலே, அங்கே தொழிலாளர்கள், படித்த பொறியியல் வல்லுநர்கள் வேலை செய்வதற்கு, வேலையில் அமர்த்துவதற்கு—சுமார் 15,000 பேர்களுக்கு அங்கே வேலை கொடுக்கக்கூடிய—ஒரு வாய்ப்பிருக்கும். அதைத் துரிதமாக, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே அமைத்துத்தர வேண்டுமென்று உங்கள் மூலமாக, மாண்புமிகு அமைச்சர் அவர்களை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையிலும், சென்னையிலே உள்ளதைப் போன்று தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதற்காக, கோவை மருத்துவக் கல்லூரிக்குப் பின்புறமுள்ள சுமார் 14 ஏக்கர் நிலப்பரப்பில், 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில், முதற்கட்டமாக, 2,50,000 சதுர அடி கொண்ட, தகவல் தொழில்நுட்பப் பூங்கா தொடங்குவதற்கு, 'எல்காட்' நிறுவனத்தின் மூலமாகப் பூர்வாங்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. தேவைகளுக்கேற்ப, இரண்டாவது கட்டத்தில், மேலும் 2,50,000 சதுர அடி கொண்ட தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதற்கும், மாண்புமிகு அம்மா அவர்களால் உத்தேசிக்கப்பட்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

2004 ஜூலை 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 79, திரு. பி.கே.டி. நடராஜன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.*

79—

கால்நடை மருத்துவமனை

***20800—திரு. பி.கே.டி. நடராஜன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தொகுதி, பொன்னுமாந்துறை கிராமத்தில், கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தொகுதி, பொன்னுமாந்துறை கிராமத்தில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை, 2,294 மட்டுமே. அதன் அருகில், 2 கிலோ மீட்டர் தொலைவில் பித்தனாப்பட்டி மற்றும் முத்தழகுப்பட்டி கால்நடை கிளை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. தற்போது துறையில் செயல்பட்டுவரும் கால்நடை கிளை நிலையங்கள் மட்டுமே, கால்நடை மருந்தகங்களாகவும், மருத்துவமனைகளாகவும் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. எனவே பொன்னுமாந்துறை கிராமத்தில், தற்போது, எந்தவொரு கால்நடை நிலையமும் செயல்படாத நிலையில் அங்கு நேரடியாக ஒரு கால்நடை மருத்துவமனை தொடங்க வாய்ப்பில்லை.

(ஆ) எழாது.

திரு. பி.கே.டி. நடராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஆத்தூர் சட்டமன்றத் தொகுதி, பொன்னுமாந்துறை கிராமத்திற்கு அருகில் சின்ன பொன்னுமாந்துறை, காமாட்சிபுரம், குட்டியபட்டி, குருவப்பநாயக்கன்பட்டி, இராயர்பட்டி, டி. புதூர், மல்லேந்திரபுரம், வண்ணாம்புதூர், பள்ளப்பட்டி போன்ற*